# சாய்ராம் கல்லூரி மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை

■ சென்னை

சாய்ராம் கல்லூரியில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு ரூ.47 லட்சம் கல்வி ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

சாய்ராம் பொறியியல் கல்லூரி மற்றும் சாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி ஆகியவற்றில் படிக்கும் மாணவ-மாணவியரில் அண்ணா பல்கலைக்கழக தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றோருக்கு ஆண்டுதோறும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விழாவில் அண்ணா பல்கலைக் கழக பேராசிரியர் முனைவர் செல்லத்துரை மாணவர்களுக்கு ஊக்கத் தொகையை வழங்கினார். அறக்கட்டளை தலைவர் லியோமுத்து தலைமை தாங்கினார். தலைமை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து முன்னிலை வகித்தார்.

லியோமுத்து பேசுகையில் "மாணவர்கள் எவ்வளவு கல்வி கட்டணம் செலுத்துகிறார்களோ அதை பல்கலைக்கழகத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதன் மூலம் திரும்ப பெற்றுக்கொள்ளலாம். இந்த ஆண்டு 450 பேருக்கு ரூ.47 லட்சம் ஊக்கத் தொகை வழங்கியுள்ளோம். இனி வரும் ஆண்டுகளில் இது ரூ.1 கோடியாக உயரும் வகையில் மாணவர்கள் படிப்புத் திறனை வெளிக்காட்டி அதிக மதிப்பெண்களை எடுக்க வேண்டும் என்றார்.

சாய்ராம் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் சி.வி.ஜெயகுமார், சாய்ராம் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி முதல்வர் முனைவர் கே.பழனிகுமார் கலந்துகொண்டனர்.




மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகைகளை வழங்குகிறார் சாய்ராம் கல்வி நிறுவனங்களின் தலைவர் லியோ முத்து.